10.10.2025

O.S.No. 46/2024

PW3–பாலன் – த/பெ. ஆறுமுகம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.10.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் தினத்தந்தி பத்திரிக்கையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். எனதுவேலை முழுவதும் வெளியூரில் இருக்கும் என்றால் சரியல்ல, வாரக்கடைசியில் ஊருக்கு வந்துவிடுவேன். நான் பத்திரிக்கை துறையில் பணியாற்றிதால் எனக்கு சட்டங்கள் தெரியும் என்றால் சரியல்ல, ஆனால் எனக்கு ஓரளவு தெரியும். நான் தற்போது தான் நீதிமன்றம் வந்துள்ளேன். நான் ஓய்வு பெற்று சுமார் 7 ஆண்டுகள் ஆகிறது.

2. வழக்கு சொத்து அமைந்துள்ள இடம் எனக்கு தெரியும். வழக்கு சொத்திலிருந்து 1/2 கி.மீ தொலைவில் மேற்குதொடர்ச்சி மலை உள்ளது என்றால் சரியல்ல, 1 கி.மீ இருக்கும். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் வாதி வழக்கு சொத்தில் தேக்குமரம் மற்றும் இதரமரங்களை வெட்டி எடுத்துள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தேக்குமரத்தை வெட்டுவதற்கு வனத்துறையிடம் அனுமதி வாங்கவேண்டும் என்றால் எனக்கு தெரியாது.

3. வாதி வழக்கு சொத்தில் எவ்வளவு அளவு கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் 54 செண்ட் கோரி தாக்கல் செய்துள்ளார். வாதி வழக்கு சொத்தை வாரிசு அடிப்படையில் அனுபவம் செய்துவருவதாக

தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தைபொறுத்து வாதிக்கு மட்டுமே வாதியின் தாத்தாவிடம் இருந்து உரிமைமூலம் பெற்றுள்ளார் என எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. 1948ம் ஆண்டு வாதியின் தாத்தா, தேவதாஸ், இஸ்ரேல், ஆபிரகாம் நாடாரின் வாரிசுகளிடமிருந்து வாய்மொழியாக கிரையம் வாங்கினார். வாதியின் தாத்தா பெயர் கருவேல் நாடார். கருவேல் நாடாரின் சகோதரரும் பிராதுதபசில் சொத்தின்அருகே சொத்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அவர் பெயர் அருணாச்சல நாடார். அருணாசல நாடார் 1956ம் ஆண்டு ராஜாமணி நாடார், நவமணி நாடார், தங்கசாமி என்ற மைனரிடமிருந்து வாய்மொழியாக கிரையம் வாங்கினார்.

5. தாவா சொத்தின் நான்குபக்கமும் யார் யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியும், வடக்கே பொன்னம்மாள், மேற்கே ராஜ்குமார், கீழ்புறம் சுப்பையா, பொன்னுச்சாமி, தெற்கே குத்தாலிங்கம் நாடார் இடம் உள்ளது. நான் வாதி அழைத்து சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரியல்ல, நானாகதான் வந்தேன்.

6. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கைத்தடி பாகபிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, எனது தந்தை சொல்லி தெரியும். எனது தந்தை இறந்து சுமார் 15 ஆண்டுகள் ஆகிறது. பிராதுதபசில் சொத்தில் வாதிக்கு எந்த உரிமையும், அனுபவமும் கிடையாது என்றாலும், பிரதிவாதி தபசில் சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்

என்றாலும், மேலும் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை கடைசியாக கடந்தவாரம் பார்த்தேன். வாதி வழக்கு சொத்தில் 2 ஏக்கருக்கு வேலி அமைத்து, போர்வேல் போட்டு, மாங்கன்று அமைத்து அனுபவம் செய்துவருகிறார் என்றால் இருக்கலாம்.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.